2010 ஏப்ரல் 30]

இதிலே அம்பத்தூர், மாதவரம் ஆகியவை திருவள்ளூர் மாவட்டத்தில் வருமென்று நினைக்கின்றேன்—திருவள்ளூர் மாவட்டத்தையொட்டி சென்னை இருக்கிறது. இந்தப் பக்கம் தாம்பரம், ஆலந்தூர், சோழிங்கநல்லூர். இவற்றில் தாம்பரம் என்பது ஒரே வட்டமாக இருந்தது. ஒரே வட்டமாக இருந்ததை இன்றைக்கு தாம்பரம், ஆலந்தூர், சோழிங்கநல்லூர் என்று 3 வட்டங்களாகக் கடந்த ஆண்டு பிரித்த் ஆட்சி, தலைவர் கலைஞர் ஆட்சி என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். அதேபோல, மாதவரம், அம்பத்தூர் வட்டங்கள்; அவற்றை நாம் பிரித்து, இன்றைக்குச் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. இப்பொழுது நத்தம் சர்வே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நான் என்னுடைய பதிலுரையில்கூடச் சொன்னேன், சென்னை மட்டும்தான் பாக்கி இருக்கிறது என்று. மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, சென்னையிலும் வட்டங்கள் பிரிக்கப்பட வேண்டுமென்ற கருத்துரு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. வருகிற ஆண்டிலே நிச்சயம் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

126—

நூற்பாலை

***101713—திரு. போ. சின்னப்பன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2010 ஏப்ரல் 30

(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளம் தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.*

திரு. போ. சின்னப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி மிகவும் கஷ்டப்படும், மிகவும் பின்தங்கிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் வாழும் பகுதியாகும். இந்தப் பகுதியில் 100 பேர்கள் வேலை செய்கின்ற அளவில்கூட ஒரு தொழிற்சாலையும் இல்லை. இந்தப் பகுதியில் 16 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களும், இளம்பெண்களும், 16 வயது ஆனவுடனேயே கோயம்புத்தூர் மாவட்டத்திற்கும், திருப்பூர் மாவட்டத்திற்கும், நூற்பாலைகளுக்கும், பின்னலாடைத் தொழிற்கூடங்களுக்கும் பிழைப்பைத் தேடிச் சென்று விடுகின்றனர். ஒரு சிலர் சென்னைக்கும், வியாபார நிறுவனங்களுக்கும், ஒரு சிலர்* sweet stall *வைப்பதற்கு ஆந்திராவுக்கும் சென்று விடுகின்றனர். கிராமங்களில் இளைஞர்களே இல்லை என்ற நிலை உள்ளது. வயதானவர்கள் வாழும் பகுதியாக கொஞ்சம் கொஞ்சமாக அந்தப் பகுதி மாறி வருகிறது. அதோடு, பருத்தியும் அதிகமாக இந்தப் பகுதியில் விளைகிறது. ஆகையால், விளாத்திகுளத்தில் ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்க இந்த அரசைத் தங்கள்மூலம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகுதியிலே நானும் ஒரு முறை வெற்றி பெற்றிருக்கிறேன். அந்தத் தொகுதியினுடைய சூழ்நிலை எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால், 1984 ஆம் ஆண்டுக்குப் பின்னாலே புதிதாக நூற்பாலை துவங்கும் திட்டம் அரசிடம் இல்லாமல் இருப்பதற்குக் காரணம், இலாபகரமாக இந்தத் தொழில் இன்றைக்கு இல்லாத காரணத்தால் அரசினுடைய பரிசீலனையில் இல்லை. இருக்கிற மில்லை ஓட்டுவதே இன்றைக்கு சிரமமாக இருக்கிறது. ஆகவே, அதற்கு வேண்டிய பணிகளை மட்டும்தான் அரசு செய்துகொண்டிருக்கிறது.*

2010 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும் மக்கள் இதயங்களைவிட்டு மறையாத புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், மகாகவி பாரதி பிறந்த எட்டையபுரத்திலே கூட்டுறவு நூற்பாலை அமைத்துக் கொடுத்தார். அந்த நூற்பாலைதான் தமிழகத்திலே இன்றும் இலாபத்தோடு வெற்றிகரமாக இயங்கும் ஒரே கூட்டுறவு நூற்பாலையாகும். அதேபோல், பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகம் வாழும் விளாத்திகுளம் பகுதியிலே ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைத்து, அங்குள்ள இளைஞர்களுக்கும், இளம்பெண்களுக்கும் வேலை கொடுத்தால், வேலைக்காக அண்டை மாநிலங்களுக்கும், அண்டை மாவட்டங்களுக்கும் செல்கின்ற நிலை குறையும். ஆகையால், கண்டிப்பாக அங்கே ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்க மீண்டும் தங்கள்மூலம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்திலும், விருதுநகர் மாவட்டத்திலும் நிறைய தனியார் நூற்பாலைகள் இருக்கின்றன. அரசாங்கம் புதிதாக நூற்பாலை துவங்க வேண்டிய அவசியம் வருகிற நேரத்தில், அதற்கு வேண்டிய முன்னுரிமை அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. சை. சையது கௌஸ் பாஷா, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

127—

கம்பிவட ஊர்தி

***31527—திரு. சை. சையது கௌஸ் பாஷா:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—